அறிக்கையை நாம் நிறைவு செய்கிறோம். இந்தச் சூழலில், இந்த நான்காண்டுகளிலும் என்னுடைய தொகுதி மேம்பாட்டுக்கென்று, என்னுடைய தொகுதி வளர்ச்சிக்கென்று கலை, அறிவியல் கல்லூரி மற்றும் வேளாண்மைக் கல்லூரி வேண்டுமென்று நான் ஏற்கெனவே கேட்டிருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தயவுசெய்து நீங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பேசுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: கவன ஈர்ப்புதான் கொடுத்திருந்தேன். அதாவது, கலை, அறிவியல் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, மேம்படுத்தப்பட்ட மருத்துவமனைகள் வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிப்பதற்காகத் தந்திருந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் நான் நேற்று சந்தித்தேன். இந்த நான்காண்டுகளில் என்னுடைய தொகுதிக்கான சிறப்புத் திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை. அதனால், மாண்புமிகு மூத்த அமைச்சர்களுக்கு அறிவுறுத்தி, கலைக் கல்லூரி அல்லது வேளாண்மைக் கல்லூரியை நடப்பாண்டிலேயே என் தொகுதியில் தொடங்குவதற்கு இந்த அரசின் கவனத்தை ஈர்த்து அமருகிறேன்.

(ஈ) பழனி தண்டாயுதபாணி திருக்கோயில் கிரிவலப் பாதை ஆக்கிரமிப்புகள் அகற்றம், பொதுமக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் கிரிவலப் பாதையில் ஆக்கிரமிப்புகளை அகற்ற மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளால், பல தலைமுறைகளாக அண்ணாசெட்டி மடம் எனும் பகுதியில் வாழும் 120–க்கும் மேற்பட்ட ஏழைக் குடும்பங்கள், அதேபோல, பட்டாதாரர் நிலங்களிலுள்ள வியாபாரிகள், சந்நிதி வீதி வியாபாரிகள், சாலையோர வியாபாரிகள் மற்றும் அப்பகுதியில் விளைநிலங்களுக்கு, வேளாண் பணிகளுக்குச் செல்லும் உரிமையை பல தலைமுறைகளாகப் பெற்றுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள், அந்தப் பகுதிகளில் குடியிருந்து வரும் குடியிருப்புகளில் வாழும் பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் வாழ்வுரிமையை

2024 ஜூன் 29] [திரு. ஐ.பி. செந்தில்குமார்]

இழக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே, அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பல்வேறு திட்டங்களை உருவாக்கி, பாதுகாத்துவரும் நம்முடைய மக்கள் தலைவரின் அரசு, எங்களது பழனிவாழ் மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வழிவகை செய்வதன் அவசியம் குறித்து அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன். நன்றி.

(உ) Cotton Corporation of India **நிறுவனத்திடம் உள்ள பஞ்சை நூற்பாலைகளுக்கு மட்டும் வழங்குவது**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கிற* Cotton Corporation of India, *அவர்களிடத்தில் இருக்கிற பஞ்சை ஜூலை முதல் வாரத்திலே வியாபாரிகளுக்கு விற்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொண்டிருப்பதாக அறிகிறோம். அது நடந்துவிட்டால், தமிழ்நாட்டில் இருக்கிற நூற்பாலைகள் அத்தனையையும் மூடுவதைத் தவிர, வேறு வழி கிடையாது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக ஒன்றிய அரசின் கவனத்திற்கு இந்தப் பிரச்சினையை எடுத்துச்சென்று, அதற்கான தீர்வைக் காண வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும்* Cotton Corporation of India, *வியாபாரிகளுக்கு அதை விற்றுவிடக் கூடாது; நூற்பாலைகளுக்குத்தான் பஞ்சை கொடுக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் அரசின் கவனத்தை ஈர்த்து அமருகிறேன்.*

(ஊ) குளச்சல் தொகுதி, பழத்தோட்டம் கிராமம், தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் என்ன இருக்கிறதோ அதை மட்டும் சொல்லுங்கள்.*